உ
சிவமயம்



# சீலன்
## அவர்களின்
# நினைவு மலர்

06.08.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்

கனடா- ஸ்காபுரோவில் வசித்தவருமான

# அமரர் சின்னத்துரை ஜெயசீலன்(சீலன்)


அவர்களின்

# *நினைவு மலர்*

# 06.08.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
18.06.1960

மறைவு
27.06.1998

# அமரர் சின்னத்துரை ஜெயசீலன்

## (சீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புச்
சகோதரனுக்கு
எமது
இதய அஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

கற்பக வளத்தை தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாண பெருநிலப்பகுதியின் வடபால், கல்வியும், கவின்கலையும் சிறந்து விளங்கும் பேரூராம் தெல்லிப்பழையில் மனையறம் சிறந்திட வாழ்ந்த சின்னத்துரை மகேஸ்வரி தம்பதிகளுக்கு, வாழ்வும் வளமும், பெருகிட நான்காவது மழலைச் செல்வமாக 1960ம் ஆண்டு ஆனித்திங்கள் பதினெட்டாம் திகதி (1960.06.18) மண்ணில் மலர்ந்தார். வெற்றியும், சீலமும் என்றும் திகழவேண்டுமென பெற்றோர் கருதி, ஜெயசீலன் என்ற நற்பெயரை தம் செல்வத்துக்கு சூட்டி மகிழ்ந்தனர்.

பெருமையும், சிறப்பும், பழமையும் கொண்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்து, அங்கேயே நிறைவும் செய்தார். குடும்பத்தின் நிலை கண்டு இளவயதிலேயே தொழில் தேடினார். தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு நிறுவனத்தில் தொழில்நுட்ப பணியாளராக சிலகாலம் கடமையாற்றினார்.

குடும்பப் பொறுப்பும், பெற்றோர்களின் நிலையும் வெளிநாடு சென்று தொழில் செய்ய வேண்டிய நிலையை உருவாக்கிய போது, சிங்கப்பூர் சென்று அங்கு ஏழு வருடங்கள் தொழில் செய்தார். அதன்பின் நாடு திரும்பியவர் மீண்டும் வேலை செய்வதற்காய் குவைத் சென்றார்.

பல்லின மக்களும் சுதந்திரமாக வாழும் கனடாவுக்கு 1992ம் ஆண்டு வந்து சேர்ந்தார். இங்கு தன் விடா முயற்சியினாலும், தொழில் நுட்ப அனுபவத்தினாலும் பல தொழிலகங்களில் தொழில் நுட்பவியலாளராக பணியாற்றியதுடன், ஓய்வு நேரங்களில் சுயமாகவும் தொழில்நுட்பத்திருத்த வேலைகளில் ஈடுபட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஜெயகௌரி (இங்கிலாந்து), நவநிதி (இலங்கை), தயாநிதி (இளமையில் காலமானார்), ஆகிய அன்புச் சகோதரிகளுக்கு தம்பியாகவும், தயாளகுமார் (இங்கிலாந்து), நவரஞ்சன் (கனடா), ஜெயநாதன் (இங்கிலாந்து), ஆகிய சகோதரர்களுக்கு பாசமிகு அண்ணனாகவும் வாழ்ந்தார்.

சிறிகெங்காதரன் (இங்கிலாந்து), கனகரத்தினம் (இலங்கை), தர்ஷினி (கனடா), ஆகியோருக்கு மைத்துனரும் ஆவார். இவர் ஜனகன் (இங்கிலாந்து), டயானி (இலங்கை), அசோக் (இலங்கை), துளசி (இலங்கை), கயன் (இலங்கை) ஆகியோரின் இனிய மாமனாரும், ஜெனிக்காவின் பாசமிகு பெரிய தந்தையுமாவார்.

இவர் தனது வாழ்வில் அமைதி, பொறுமை மிக்கவராக வாழ்ந்தார்.

இவர் 1998ம் ஆண்டு ஆனித்திங்கள் 27ம் திகதி தனது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்தார்.

இவர் ஆத்மா அமைதி பெற பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி ! சாந்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனினை உருக்கி.......

மும்மலர்களுக்கு -தம்பி
மும்மணிகளுக்கு -அண்ணன்
ஈரைந்துமாதம் சுமந்தவளுக்கு -திருமகன்
இதமான வாழ்வும் சுகமான நிலையும்
வேண்டாமென விலகிச்சென்ற -ஜெயசீலா
தந்தைக்கு கடமை செய்துவிட்டேன்
தரணியில் இனிக் கடமை யேதுமில்லை
என்றெண்ணித்தான் விண்ணுலகம் சென்றாயோ?
நாடுவிட்டு வந்த நம்மவர்களை
நடுக்கடலில் தவிக்கவிட்டு
நீந்திச்சென்று நிம்மதியாய் மறைந்தாயோ
ஊனினை உருக்கி உள்ளொளியில் வளர்த்தவள்
உன்னைக்காணாது கவலைக்கடலில் மூழ்கிட
வாழையடி வாழையாய் வந்த சொந்தங்கள்
வாழ்ந்த காலத்தில் நீ சேர்த்த பந்தங்கள்
வெந்தணலில் வாடி வதங்கிட
எங்கு சென்றாய் எங்கள் சீலா?
கருமலர் மாலை அணிந்து
கருவில் வளர்த்தவள் நிலைமறந்து
பார்மகள் இல்லம் விட்டு
மேல்மகள் இல்லம் சென்றாயோ -சீலா!

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் மனதில் இருப்பாய்....

நீர் வந்த வேளை எல்லாம் அன்புமொழி பேசி

அண்ணை என்று அழைத்திடுவாய்
நமக்கேதும் என்றால் பதைபதைத்தே போய்விடுவாய்
நாமேதும் சொல்லாமல் நலமெல்லாம் செய்து நின்றாய்
நல் ஆதரவு நல்கி நலமே வாழ்ந்திருந்தாய்
சீலன் என்று சொல்லி சிங்காரமாய்
அழைத்திடுவாள் என் மனைவி
உள்ளத்தே ஒழிவின்றி உற்றபோது வந்து நின்று
உதவி புரிந்திடுவீர்
சீலன் மாமா என்று சொல்லி செல்லமாய்
அழைத்திடுவர் என் மக்கள்
சீர் செய்து விட நீர் பக்கத்தில் இருந்திடுவீர்
சீலன் மாமா எங்கே என்று என் மக்கள் கேட்டிட
சொல்வது ஏது என்று தடுமாறி தவிக்கிறேன்
நலமாக என்றும் வாழ்ந்திடுவாய்
என்றே நாம் இருந்தோம்- நீயோ
நல்லோர் மனதில் வீற்றிருக்க
நம்மை விட்டு சென்றுவிட்டாய் - சீலா

என்றும் உன் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கிறோம்

செல்வரத்தினம் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லவொரு நண்பரில்லை

கட்டிலிலே நான் தூங்குகின்ற வேளையிலே
நீ கதைத்த கதைகளெல்லாம் கனவிலும் வருகுதடா
நீ என்று என்னைவிட்டுப் பிரிந்தாயோ அன்றிலிருந்து
உறவான நண்பர் எனக்கு ஒருபேருமில்லை
செல்வமென்ற ஆசை கொண்டு பழகும் நண்பரிலே
அன்பு ஒன்றே தெய்வமென்று பழகிய சீலா
நானும் என் மனைவிமக்களும் மாற்றமொன்று தேடுகிறோம்
வழியொன்றும் காணவில்லை
ஆற்றும் வழிதேடுகிறோம் ஆறவில்லை தேறவில்லை
பெட்டியிலே நீ நீட்டி நிமிர்ந்து படுத்து கண்ட
லாபம் தான் என்ன?
என்னோடு உன் அம்மாவையும் சகோதரர்களையும்
கலங்கவிட்டுச் சென்றாயோ
சொல்லி அழுதுவிட்டால் துயரமெல்லாம் தீர்ந்துவிடும்
சொல்லவொரு நண்பரில்லை சொல்வதற்கும் வார்த்தையில்லை
உன்னைப் பெற்ற தாயோ தனியே படுத்தழுது
தலையணையை நனைப்பதன்றி
இனியோர் பரிகாரம் எவரும் உரைப்பதில்லை
நண்பா சீலா உன்னை கூட்டிச் சென்ற கூற்றுவனைக்
காணாமல் என் குழப்பம் அகல்வதில்லை
ஆவி போகும், போனபின்பு யார் தொடந்து கூடுவார்?
பாவி என்றும் நண்பனென்றும் பத்துநாட்கள் பேசுவார்
பாசமும் நேசமும் மோசமென்று காட்டி விட்டுச் சென்றாயே
நன்றியில்லாமல் நீ நடந்தாயானால் நாயினும் கீழ் எனப் பாடுவேன்
நீ எனக்கு நன்றியுடன் தானே நடந்தாய்
நீ போகுமுன் ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தாயோ நீண்டதோர் ஆயுளும் நிறைந்ததோர்
செல்வமும் தானே கேட்டாள்
மணமேடையும் காணாமல் பாதிவயதினில் சென்றாயே
ஊனுடல் மீதிலே உன் உடல் போல
ஒளிமிகும் புகழுடல் கண்டதில்லை
நீட்டிப் படுக்கும் வரை நிம்மதியாய்ப் படுத்தாய்
ஊட்டி வளர்த்த உன் தாயை ஒரு வார்த்தை கேட்டாயா
எல்லாம் முடிந்து எமன் வந்தால் போதுமென்றா நீ போனாய்
ஊர் பேரறியாமல் உயிர் துறந்த நண்பனே
என் ஊமை மனதுமட்டும் உனைத்தேடி வாடுதடா
அன்பே! என் அன்பின் சீலா
உன் ஆன்மா அமைதியுற வேண்டுமென
ஆண்டவனைப் பிரார்த்தித்து
என் கண்ணீர்க் கவிதையை முடிக்கிறேன்

**நண்பன் குப்பிழான் சிவநேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்
## கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்.
இறைவன் அடிசேரா தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

## நிலையாமை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

நாளென் ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

நாற்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

குடும்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

புக்கில் அமைந்தின்ற கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

(அமரர்கள்)

**சபாபதி + இலட்சுமி**

சின்னம்மா
(அமரர்)
+
கிருஷ்ணர்
(அமரர்)

செல்லம்மா
+
சபாபதி
(அமரர்)

**சின்னத்துரை**
(அமரர்)

இரத்தினம்
+
இராசையா
(அமரர்)

ம
(அ
த

ஜெயகௌரி
+
சிறிகெங்காதரன்
(இங்கிலாந்து)

ஜனகன்
(இங்கிலாந்து)

நவநிதி
+
கனகரத்தினம்
(இலங்கை)

டயானி
அசோக்
துளசி
கயன்
(இலங்கை)

தயாநிதி
(அமரர்)

**ஜெயசீல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ாவழி

(அமரர்கள்)

**கந்தையா + சின்னத்தங்கம்**

...னம் | ...சயா

மகாதேவன் (அமரர்) + தவமணி

உருக்குமணி (அமரர்) + அப்புக்குட்டி (அமரர்)

நடராசா (அமரர்) + சரஸ்வதி

**மகேஸ்வரி** (கனடா)

சிவதாசன் (அமரர்) + இராஜேஸ்வரி

**...பசீலன்**

தயாளகுமார் (இங்கிலாந்து)

நவரஞ்சன் + தர்ஷினி (கனடா)

ஜெனிக்கா (கனடா)

ஜெயநாதன் (இங்கிலாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

# தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற் பாதமும்
காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதேயிந்த
மானிலத்தே

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்புதன் வியா ழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யானே.

கருவுற்ற நாள்முத லாகவுன்
பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங்
கிடந்தலந் தெய்த்து ஒழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா
திருவா ரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங்
காய்கச்சி யேகம்பனே.

# திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவவுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்தானரும்பி விதிர் விதிர்த்து உன்விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந்தருவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலாப்பிலா வொன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!
சித்தத்துள் தித்துக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளப்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டிஅழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவ ல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

# திருப்புராணம்

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாயிப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா திறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் கணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனதெனக் கருளி
என்னை அறிவித், தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லைஇல்லா ஆனந் தமளித்(து)
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும் புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன் காண் சென்றடையான் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதத் திருவந்தாதி

## காரைக்கால் அம்மையார்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்- நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே- அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்- என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்றுருவம் ஏது.

என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும் பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்கு
அருளாக வைத்த அவன்.

காலனையும் வென்றோம் கடுநகரம் கைகழன்றோம்
மேலே இருவினையும் வேரறுத்தோம் கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எமது நன்றிகள்

எமது குடும்பத்தின் திருமகனும், எமது பாசமிகு சகோதரனுமாகிய அமரர் சின்னத்துரை ஜெயசீலன் அவர்களின் மறைவு அறிந்து எமக்கு சகலவிதமான உதவிகளை செய்து, உறுதுணையாக இருந்தவர்களுக்கும் நேரிலும், தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் அனுதாபம், ஆறுதல் அளித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், பின் வீட்டு கிருத்தியத்திலும் இன்று நடைபெறும் நினைவு அஞ்சலியிலும் பங்கு பற்றிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனி

Apt 703
135 Fenelon Drive,
North York, Ont.
M3A 3K7
Canada
416-449-7309

"ARIVAKAM"
13 Arcus Road,
Bromley,
Kent Bri 4NN
U.K.
0181-698-2938

Mrs. K. Navanithy
Kalikovilady
Erlalai Centre, Erlalai
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரிச்சுவடி

## தமிழ் இலக்கங்கள்

| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |

## உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ எ

ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

**மெய் எழுத்துக்கள்** — **உயிர் மெய் எழுத்துக்கள்**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

Printed By UTM Business Centre (உதயம்)
Tel: (416) 265-4605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org